ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# நமது விதி

- மதுரகவி தாஸன் தி கு அ வெங்கடேசன்

திருவாய்மொழி 10.6.1 பாசுரம்:

அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே
இருள்தரு மாஞாலத்தில் இனிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே

பொய்ந்நின்ற ஞாலம் தொடங்கி, திருவாய்மொழி 10.5 முடிய, நம்மாழ்வார் எம்பெருமானைத் தொடர்ந்து சென்றார். 10.6 தொடக்கமாக, எம்பெருமான் ஆழ்வாரைப் பின்தொடர ஆரம்பிக்கிறான். இது வரையில், ஆழ்வார் தமது குற்றங்களையும் பக்தியையும் அவனுக்குக் கூறி அவனைப் ப்ரார்த்தித்து நின்றார். ஆழ்வாரின் பாரிப்பைக் கண்ட எம்பெருமான், ஆழ்வாரைத் தன்னுடன் அழைத்துச் செல்வதற்காகத் திருவாட்டாறு திவ்யதேஸத்தை விரைந்து அடைந்து நின்றான் ("விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்").

ஆழ்வாருடைய பாரிப்பைக் காட்டிலும் அவன் பாரிப்பு விஞ்சி நிற்கிறது - "சூழ்ந்ததனில் பெரிய என் அவா அறச் சூழ்ந்தாயே", "வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று ஆர்வுற்ற என்னை ஒழிய என்னில் முன்னம் பாரித்து தான் என்னை முற்றப் பருகினான்", "சிரம் ஜீவதி வைதேஹீ யதிமாஸம் தரிஶ்யதி, ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்".

ஆழ்வரை அனுபவிப்பதற்காக, அவரை பிரியாமல் இருக்கும் ஓர் இடம் தேடி ஆழ்வாரை அங்கு அழைத்துச் சென்று, அங்கு ஆழ்வார் இட்ட வழக்காய் அவன் இருக்கப் பாரிக்கின்றான்.

ஆனால் ஆழ்வார் அவ்வாறு செய்வாறோ, எனில். ஆழ்வார் மீது அவனுடைய காதல் விஞ்சியமையால், ஆழ்வாருக்கு அவன் பரதந்த்ரன் ஆனபடியை ஆழ்வார் காண்கிறார். அப்படி அவன் ஆனமையைக் கண்டு தன்னுடன் துணை போக ஆழ்வார் உலகத்தைப் பார்க்கிறார். ஆனல் இவ்வுலக மக்களோ, புலன்களுக்கு வசப்பட்டவராய் இருக்கக் கண்ட ஆழ்வார், தம் மனது அவன் அருளுக்கு இலக்கானபடியைக் கண்டு, அதற்கு அவன் மேன்மையையும் அவன் எளிமையையும் சொல்லி இனியராகிறார். இதற்கு முன் அவன் ஸர்வேஶ்வரனாயும் ஸ்வதந்த்ரனாயும் இருந்தபடியைக் கண்ட ஆழ்வார், இப்போது அவன் அடியார்க்கு பரதந்த்ரன் ஆனபடியைக் காண்கிறார்.

தன் தன்மையால் தன் பாரதந்த்ரயத்தை இதுவரையில் இழந்த ஆழ்வார், இப்போது அவன் தன்மையால் தன் பாரதந்த்ரயத்தை இழந்து நிற்கிறார்.

இதற்கு முன்னேயே இதை ஆழ்வார் சொல்லவில்லையோ எனில் ("இருத்தும் வியந்து") - இங்கு தாம் அடியார்க்கு அடியான் ஆனமையால் அது அமைந்தது என்கிறார்.

திருவாய்மொழி 10.6.1 பாசுரம் - அருள் பெறுவார்

அருள் பெறுவார் அடியார் தம் அடியனேற்கு: ஆழ்வார், அடியார் தம் அடியார் ஆனதே காரணமாக. அவன் அருளுக்கு இலக்கானவர் சிலரே ("ததாமி"). வெறும் அடியாரன்று. அருள் பெறுவார் அடியார். அவர்களுக்கு தன்னை முற்றவும் கொடுத்து அவர்கள் சொல்லை எதிர்பார்த்து நிற்கிறவன் அவன். அப்படிப்பட்டவர்கள் தம் ஸ்வாமி ஆனமையால், அவன் அருள் தம்மளவும் வந்தது என்கிறார் ஆழ்வார். அவர்கள் பெற்ற அருள் ஆழ்வார் அளவும் வந்தது. அப்படி அவர்கள் அனைவரும் பெற்ற அருளை இப்போது ஆழ்வார் ஒருவராகவே பெறுகிறார் ("அஸ்மாபி: துல்யோ பவது ராகவ").

ஆழ்வார் அடியார்கு அடியரானது எப்படி அவனுக்குத் தெரிந்தது எனில். நெடுமாற்க்கடிமையில், ஆழ்வார் "விடுமாறு என்பது என்", "நீக்கம் இல்லா அடியார் தம் அடியார் அடியார் அடியார் எம் கோக்கள்", "தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்க" என்று சொன்னதையே அவன் மனதில் கொண்டான்.

ஆழியான் - ஒரு திருக்கண்ணால் சுதர்ஶனாழ்வாரைக் காணும் அவன், மற்றொரு திருக்கண்ணால் நம்மாழ்வரை முழுதும் நோக்கி அவருக்கு அருள் புரிகிறான்.

அவர்கள் அருள் பெறுவார் அடியார் ஆனமையால், இவன் அருள் தருவான் அமைகின்றான் ஆகிறான்.

அவனோ ஸர்வேஶ்வரன். ஆழ்வாரோ அருளைப் பெறப் பாரிக்கிறார். அப்படி இருக்க, தடை என்ன, எனில். ஆழ்வார் வார்த்தைக்காக அவன் காத்திருக்கிறான்.

அது நமது விதி வகையே: அவன், அருளைத் தருவது, ஆழ்வார் விதிப்பதாலன்றோ.

இங்கு நமது விதி என்றது - நம்முடைய கடனாலென்பதில்லை. எம்பெருமானார்க்கு முன்பானோர் இது ஆழ்வாரின் பாக்யவசத்தால் என்று பணித்தனர். ஆனால், எம்பெருமானார் இது ஆழ்வாரின் இப்பாசுர நிலைக்குச் சேர அமையாது என்று கூறி, இங்கு நமது விதி என்பது ஆழ்வாரின் ஆணைப்படி என்று பணித்தார்.

எப்படி இளைய பெருமாள் "அஹம் ஸர்வம் கரிஶ்யாமி" என்று சொல்லி, பிறகு "க்ரியதாமிதி மாம் வத" என்றாரோ, அது போல எதையும் செய்ய வல்ல எம்பெருமானும் இப்போது ஆழ்வாரின் கட்டளைக்காகக் காத்து நிற்கிறான்.

இங்கு நமது சொல் என்னாமல், நமது விதி என்றது - சொல்லை மீறலாம், ஆனால் விதியை மீறினால் அதற்கு ஒரு பலன் உண்டு என்ற பயம் இருப்பது போல், "ஆழ்வாரே! என்னைப் பணியும், என்னைப் பணியும்" என்பதாக எம்பெருமான் காத்திருக்கிறான்.

ஸர்வநியந்தாவானாலும், ஆழ்வார் ஆணையில்லாமல் செய்வதில்லை என்றிருக்கிறான்.

இது அவன் மேன்மைக்கு இழுக்கன்று. ஆழ்வாரின் இச்சையில்லாமல் செய்வதே அவன் மேன்மைக்குக் குறைவாம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

---